முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 21 திகதி முதல்

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 28 திகதி வரை

(04.06.2023 ஞாயிறு முதல் 11.06.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. வேலவனின் சக்தியான அரங்கா
   வெற்றிமுகம் மக்களடைய
   காலனையும் வென்றருளுகின்ற
   கலியுகத்தின் ஞானியே தேசிகா
2. தேசிகனே உமைபோற்றி நன்கு
   தெரிவிப்பேன் இந்தியா தமிழகத்தில்
   ஆசிபட சோபகிருது விடைதிங்கள்
   அய்நான்கோர் திகதிமேல் எழுநான்கு திகதி வரை
3. வரை நடக்கும் வார நிகழ்வாக
   வருங்கால பலன்குறித்த ஆசியாக
   அறிவிப்பேன் அகத்திய மகரிஷியும்
   ஆற்றல்மிக்க ஞானபூமி தன்னில்
4. தன்னிலே ஆளுமை சக்திகள்
   தன்னலம் நீக்கி சேவைதனை
   மண்ணுலகில் செய்து வந்தால்தான்
   மழை மும்மாரி பொழிந்துமே
5. பொழிந்துமே நீர் நிலவளம்
   பூமிதனில் குன்றா செழுமைகூடும்
   அழிந்துபோகா பெரும் பாதுகாப்பு
   அறத்தின் வழி ஆட்சியால்தான் கிட்டும்
6. கிட்டவே தருமநெறி மறந்தால்
   கேடுகள் நலிவுகள் மிகுந்து
   சட்டதிட்டம் சகலதும் சரிந்து
   சரித்திரத்தில் கறைபடும் வண்ணம்
7. வண்ணமுடன் களங்கம் பற்றி
   வாழும் காலமே அழிவதே
   எண்ணமாகி ஆளுமை தனக்கு
   இயற்கையே முடிவு கட்டுமப்பா
8. அப்பனே இனியும் திருந்தா

அவதிதரும்படி மக்களுக்கு
காப்பில்லா நாணய முறையும்
கருணையின்றி செயல்வடிவம் தந்தால்

9. தந்தாலே உலக நாடுகளில்
தரம் குறைந்து மதிப்பிழப்பு
எந்தவித பயனுமின்றி அடைந்து
இந்தியா தமிழகம் தன்னிலையில்

10. தன்னிலையில் வளர்ச்சி முடங்கி
தவிப்பும் தனிநபர் ருணமும்
இன்னும் பெருகி பின்னடைவுகாணும்
ஏற்றமும் நல்ல மாற்றமும் தர

11. தருகவே ஞானிகளை வணங்கி
தருமஞான ஆட்சி முறை
வருமுலகிலே தொடரவே இனி
வளர்ச்சி பாதுகாப்பு நிறைந்த தேசமாக மாறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 21ம் நாள் 04.06.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் வைகாசி மாதம் 28ம் நாள் 11.06.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகள்:

முருகப்பெருமானின் சக்தி வடிவமான ஆறுமுக அரங்க மகா தேசிகரே மக்கள் கலியின் கொடுமையில் இருந்து வெற்றி அடைய வேண்டியே எமனையும் வெல்லும் வல்லமையை மக்களுக்கு அருள் செய்து காக்கின்ற அரங்க மகா தேசிகரே கலியுக மகா ஞானியே ஆறுமுக அரங்க மகா தேசிகரே உம்மை போற்றியே இந்தியா தமிழகத்திலே சோபகிருது வருடம் வைகாசி மாதம் 21ம் நாள் 04.06.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் வைகாசி மாதம் 28ம் நாள் 11.06.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அகத்திய மகரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

இந்தியா தமிழகம் ஆற்றல் மிக்க ஞான பூமியாகும் ஆகவே ஞானபூமியான இந்தியா தமிழகத்தினை ஆட்சி புரிவோர் தன்னலம் கருதாது மக்களுக்கு சேவை மனப்பான்மையுடன் நடந்தால்தான் நாட்டினில் மும்மாரி பொழிந்து மழைவளம் பெருகும் நீர், நில வளமும் பெருகி செழிப்படையும்.

அறத்தின் வழி ஆட்சி செய்தால்தான் நாட்டினில் இயற்கை அழிவுகள் ஏதும் நேராமல் பெரும் பாதுகாப்புடன் நாடு இருக்கும். அதை விடுத்து ஆட்சியர்கள் தரும நெறி மறந்து ஆட்சி செய்திட்டால் நாட்டினில் கேடுகள் மிகுதியாகும் நலிவுகள் அதிகமாகும் சட்டதிட்டங்கள் எல்லாம் குலைந்து போய் நாட்டின் சரித்திரத்தில் கறைபடும் விதமாக ஆட்சியர்களால் களங்கம் உண்டாகி அழிவுதான் முடிவு எனும் நிலை உருவாகி நாட்டினில் அழிவுகள் பெருகிடுமப்பா.

ஆதலினால் இனியும் மனம் திருந்தாமல் மக்களுக்கு அவதிகள் தரும்படி நடந்தாலோ, மக்களுக்கு பாதுகாப்பில்லாது நடந்தாலோ கருணையின்றி நடந்தாலோ உலக நாடுகள் மத்தியிலே இந்திய தேசம் மதிப்பிழந்து போகும். நாட்டின் வளர்ச்சி முடங்கி போகுமப்பா. மக்கள் தவிப்படைவதோடு தனிநபர் கடன் பெருகி பின்னடைவை சந்திக்கும்.

நாடு இந்த நிலையை அடையாமல் முன்னேற்றம் அடைந்து மேன்மையான நிலையை அடைய வேண்டுமாயின் முற்றுபெற்ற ஞானிகளை வணங்கி நாட்டினில் தரும ஞான ஆட்சி முறையை பின்பற்றி நடந்தால் நாட்டின் வளர்ச்சியும் பெருகும் இயற்கை பாதுகாப்பும் பெருகி வளமான நாடாக மாறி சிறப்படையும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–